திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படி நான்காக இருக்கும் குளிர்பதன அறைகளில் இந்தக் கேள்வி போட்ட நேரத்தில்—இந்தக் கேள்வி போட்டு சில மாதங்கள் ஆகின்றன—ஒன்று கூட வேலை செய்ய வில்லை என்று தெரிகிறது. அப்படி அரசாங்கத்துக்கு அங்கிருந்து ஏதாவது புகார் வந்திருக்கிறதா? அப்படி யென்றால் மக்களுக்கு முக்கியமாகத் தேவைப்படும் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சை நிலையங்கள் கோளாறு ஏற்பட்டால் உடனடியாக ரிப்பேர் செய்து கொடுப்பதற்கு எதிர்காலத்திலாவது நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த அறைகளில் 3, 4, அறைகளில் உள்ளவை அப்பொழுது வேலை செய்யாமல் பழுதுபட்டு இருந்தது என்பதால் அவைகளை ஒன்றுகப் பழுது பார்க்க அனுப்ப முடியாமல் இருந்தது. 10–7–1972–இல் தியேட்டர் [ஏ]யில் குளிர்பதனக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதுவும்கூட உடனே பணியாற்ற முடியவில்லை. கார்பனேசேஷன் என்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டு இப்பொழுது பணியாற்றுகிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, திருச்சி போன்ற மாவட்டத் தலைநகரங்களில் இருக்கும் மருத்துவ மனைகளில் உள்ள அறுவை சிகிச்சை அறை ஏர்கண்டிஷன் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அது பரிசீலிக்கப்படும்.

திரு. ந. தருமலிங்கம்: தலைவரவர்களே, ஸ்டான்லி மருத்துவ மனையில் குளிர்ப்பதனம் செய்யப்பட்ட அறைகளில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நோயாளிகளுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா? அப்படி யென்றால் எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, குளிர்பதன அறையிலே அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்காக என்று கட்டணம் இல்லை. மற்ற குளிர்ப்பதனம் செய்த அறைகளில் தங்கியிருப்பதற்காக என்று கட்டணம் இருக்க முடியும்.

*105 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் "சர்ஜிகல்" பகுதிக்காகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில் அது எப்போது கட்டப்படும்?

(உ) அதற்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) ஆம்.

(இ) திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடுடன் வரைபடங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன.

(உ) மொத்த ஒதுக்கீடு ரூ. 15 லட்சங்கள். நடப்பாண்டிற்கான செலவு ஒதுக்கீடு ரூ. 10 லட்சங்கள்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வட சென்னையிலிருக்கும் அந்த மருத்துவமனை அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குப் பெரிதும் பயன்படும் மருத்துவ மனையாகும். இந்தப் ப்ரபோசல் வந்து பல ஆண்டு களாகியும், இன்னும் வரைபட நிலையிலேயே இருப்பதாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். அதை உடனடியாகச் செயல்படுத்த துரிதமாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் வந்து பல ஆண்டுகள் ஆகவில்லை. இந்தத் திட்டம் ஏற்கப்பட்டது 1972–73-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலேதான். எனவே 1972–73-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற அடிப்படையில் அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

Veterinary Sub-Centres in Kanyakumari.

*106—*Q.* THIRU N. DENNIS : Will the Hon. Minister for Public Health be pleased to state the number of Veterinary Sub-Centres in Kanyakumari district—constituencywise as on date?

HON. THIRU K. ANBAZHAGAN :

(1) Kanyakumari	4
(2) Nagercoil	1
(3) Colachel	3
(4) Padmanabhapuram	2
(5) Thiruvettar	2
(6) Killiyur	3
(7) Vilavancode	3

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, நாகர்கோயிலில் இருக்கும் அந்த சப்-சென்டரிலே ஒரு கட்டிடம் மிகவும் மோசமாகப் பழுதடைந்து இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி அங்கு சென்றபொழுது நேரிலே கூறினார்கள். இதுகாறும் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி பொது விவரம் கேட்டிருப்பது. எனவே இப்பொழுது கேட்ட கேள்வி பற்றி பரிசீலிக்கப்படும்.